# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 – (2023)

| தரம் - 08 | பரதநாட்டியம் | நேரம்: 2.00 மணித்தியாலங்கள் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..........................................................................................

### பகுதி-I

- ❖ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- ❖ **பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

1. பரத நாட்டியத்திற்குரிய ஆடை எவ்வாறு அழைக்கப்படும்?
   a. பிஜாமா b. பாவாடை தாவணி c. பஞ்சகச்சம் d. யாவும் பிழை

2. கழுத்தின் அசைவு சமஸ்கிருதத்தில் எவ்வாறு அழைக்கப்படும்?
   a. சிரோ பேதம்
   b. திருஸ்டி பேதம்
   c. க்ரீவா பேதம்
   d. பாத பேதம

3. ஆதி தாளத்தின் அட்சர எண்ணிக்கை யாது?
   a. 4 b. 6 c. 8 d. 10

4. திரியாங்கங்கள் எவை?
   a. நிருத்தம்,நிருத்தியம்,நாட்டியம்
   b. பாவம், இராகம், தாளம்
   c. அங்கம்,உபாங்கம்,பித்தியாங்கம்
   d. யாவும் சரி

5. உணர்வுகள் மூலம் வெளிப்படுத்தும் அபிநயம் எது?
   a. ஆங்கிகம் b. வார்ச்சிகம் c. சாத்வீகம் d. ஆஹார்யம்

6. மேலுள்ள பொருட்களைப் பார்க்க பயன்படும் திருஷ்டி பேதம் எது?
   a. உல்லோகிதம்
   b. அவலோகிதம்
   c. பிரலோகிதம்
   d. சாசி

7. தத் தெய் தாம் அடவு எத்தனை வகைப்படும்?
   a. 2 b. 4 c. 6 d. 8


kalvi.lk

8. தத் தெய் தாஹா அடவின் மறு பெயர் யாது?
   a. வீச்சடவு   b. குதித்து மெட்டடவு   c. பரவல்அடவு   d. கோர்வை அடவு

9. "புஜகே" என்பதன் கருத்து யாது?
   a. கைகள்   b. சிங்கம்   c. பாம்பு   d. யானை

10. பொழுதுபோக்கின் நிமித்தம் ஆடப்படும் கிராமிய நடனம் எது?
   a. கரகம் ,காவடி
   b. கும்மி ,கோலாட்டம்
   c. கரகம், கும்மி
   d. கோலாட்டம், வேப்பிலை நடனம்

**01) கீறிட்ட இடம் நிரப்புக.**

**( நான்கு, சீவாளி, ஆச்சா, துளை , ஸஷே)**

1. நாதஸ்வரம் செய்யப்படுவது ........................... மரம் ஆகும்.
2. காற்றுக் கருவியை.................கருவி என அழைப்பர்.
3. ஒரு அட்சரத்தில் ............ மாத்திரைகள் அடங்குவது சதுஸ்ரம் ஆகும்.
4. முயல் என்பதன் சமஸ்கிருதச் சொல் ............ ஆகும்.
5. நாதஸ்வரம் வாசிக்க ............... பயன்படுகின்றது.

**02) தொடர்புபடுத்துக.**

| | | |
|---|---|---|
| a. | சதுஸ்ர ஜாதி திரிபுடை | தத் தெய் தாஹா |
| b. | கஞ்சற் கருவி | சுற்றுதல் |
| c. | திரிபதாகம் | 24 |
| d. | ஆவர்த்தஹே | ஆதி |
| e. | ரூபகம் | நட்டுவாங்கம் |

**03) சரியாயின் (√) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக.**

a. மாடப்புறாபோல் கழுத்தசைத்தல் திரஸ்ரீனா ஆகும். (   )
b. முதலாவது தத்தெய் தாஹா ரூபகதாளத்தில் அமைந்துள்ளது. (   )
c. உடுக்கு ஒரு நரம்புக் கருவி ஆகும். (   )
d. முதலாம் பராக்கிரமபாகு இசை நடனம் ஆகியவற்றை பேணி வந்தான். (   )
e. நாதஸ்வரத்தினை முகவீணை எனவும் அழைப்பர். (   )


kalvi.lk

## பகுதி-II

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1) 1. தத் தெய் தாஹா அடவு எத்தனை வகைப்படும்.

2. இவ்வடவுகள் அமைந்துள்ள தாளம் யாது?

3. இவ்வடவுகளில் பயன்படும் முத்திரைகள் எவை?

4. இரண்டாவது தத் தெய் தாஹா அடவினைத் தாளங்கக் குறியீட்டுடன் எழுதுக.

(1+2+2+ 10= 15 புள்ளிகள்)

2) 1. இசைக் கருவிகள் எத்தனை வகைப்படும்?

2. அவற்றின் வகைகளைக் குறிப்பிடுக.

3. இசைக்கருவிகளின் வகைகளை உதாரணத்துடன் விளக்குக.

(2+3+ 10= 15 புள்ளிகள்)

3) பின்வரும் முத்திரைகளின் விநியோகங்களை ஸ்லோகத்துடனும் கருத்துடனும் தருக.

1. சற்பசிரஸ் (3× 5 = 15 புள்ளிகள்)

2. மிருகசீர்சம்

3. சிம்மமுகம்

4) இலங்கையில் நடனக்கலை பற்றி குறிப்பிடுக. (15 புள்ளிகள்)

LMDUnit Education கல்வி අධ්‍යාපන

# GRADE 6,7,8

## STUDY WITH US..!

# MATHS

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் கணித பாட வகுப்புகள்.

✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

| TAMIL MEDIUM | ENGLISH MEDIUM |
| --- | --- |
| 850/= Monthly | 1000/= Monthly |

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

### எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page